RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 211 | ஆகஸ்டு.3 2025 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## தமிழ்நாட்டில் ஆகஸ்ட் 3, 4, 5 ஆகிய தேதிகளில் ஆரஞ்சு எச்சரிக்கை விடுப்பு: வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை, ஆக.03-

தமிழ்நாட்டில் காலை 10 மணி வரை 4 மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு வானிலை மையம் தகவல் அளித்துள்ளது. கள்ளக்குறிச்சி, விழுப்புரம், கடலூர், தென்காசி மாவட்டங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. தமிழ்நாட்டில் ஆகஸ்ட் 3, 4, 5 ஆகிய 3 நாட்கள் ஓரிரு இடங்களில் மிக கனமழைக்கு வாய்ப்பு என வானிலை ஆய்வு மையம் தகவல் அளித்துள்ளது.



12 செமீ முதல் 20 செமீ வரை மிக கனமழைக்கு வாய்ப்பு என்பதால் ஆகஸ்ட் 3, 4, 5 ஆகிய 3 நாட்கள் ஆரஞ்சு எச்சரிக்கை விடுத்துள்ளது. 7 முதல் 11 செமீ வரை கனமழைக்கு வாய்ப்பு என்பதால் ஆகஸ்ட் 2, 6, 7, 8 ஆகிய 4 நாட்கள் மஞ்சள் எச்சரிக்கை விடுத்துள்ளது. மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக சிவகங்கை, காரைக்குடி, மானாமதுரை உள்ளிட்ட தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் பரவலாக கனமழை பெய்து வருகிறது.

கிராமங்களில் உள்ள ஏரி, குளம், குட்டைகள் நிரம்பி வருவதால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சி. சூறைக்காற்றுடன் கொட்டிய கனமழையால் இதமான சூழல் ஏற்பட்டுள்ளது. தஞ்சை, திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, புதுக்கோட்டை, கடலூர், விழுப்புரம், அரியலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று (ஆக.02) கனமழை பெய்ய வாய்ப்பு என சென்னை வானிலை ஆய்வு தகவல் அளித்துள்ளது.



## வி.க.நகர் மண்டலத்தில் ரூ.46.75 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப்பணிகளைப் ஆய்வு செய்தார் அமைச்சர் சேகர்பாபு

சென்னை, ஆக.03-

தமிழ்நாடு முதலமைச்சரின் நல்வழி காட்டுதலின்படி, இந்து சமய அறநிலைய த்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி. கே. சேகர்பாபு , வி.க.நகர் மண்டலத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப்ப ணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் , வார்டு 69, முத்துகுமாரப்பா தெருவில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ரூ.13.47 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நவீன சமுதாய நலக்கூடத்தின் கட்டுமானப் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார். இப்பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த சமுதாய நலக் கூடமானது, தரைத்தளம் மற்றும் மூன்று தளங்களுடன் 40,300 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டு வருகிறது. தரைத்தளத்தில் 35 எண்ணிக்கையிலான நான்கு சக்கர வாகனங்கள், 50 எண்ணிக்கையிலான இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் வகையில் வாகன நிறுத்துமிடம், முதல் தளத்தில் 435 இருக்கைகளுடன் உணவு அருந்தும் இடம், இரண்டாம் தளத்தில் 800 இருக்கைகளுடன் திருமண நிகழ்வு கூடம், மூன்றாம் தளத்தில் 10 எண்ணிக்கையிலான ஓய்வறைகளுடன் கட்டப்பட்டு வருகிறது.

தொடர்ந்து, சோமையா தெருவில் உள்ள சென்னை உயர்நிலைப்பள்ளியில் ரூ.2.75 கோடி மதிப்பீட்டில் 10 வகுப்பறைகளுடன் கட்டப்பட்டு வரும் கூடுதல் பள்ளிக் கட்டடம் மற்றும் ரூ.4.19 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையக் கட்டுமானப் பணி, ரங்கசாயி தெருவில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளியில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கூடுதல் பள்ளிக் கட்டடப் பணி மற்றும் இப்பள்ளியில் எதிரில் அமைந்துள்ள கால்பந்து மைதானத்தில் ரூ.49 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணி, மார்க்கெட் தெருவில் உள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் ரூ.8.35 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கூடுதல் பள்ளிக் கட்டடப் பணி ஆகியவற்றினை அமைச்சர் பார்வையிட்டு பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், வார்டு67, பேப்பர் மில்ஸ் சாலையில் ரூ.4.82 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் ரூ.9.68 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் வார்டு அலுவலகம் ஆகியவற்றின் கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பணிகளை உரிய தொழில்நுட்ப வழிகாட்டுதல்களுடன் குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்திடும் வகையில் பணிகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது, மேயர் ஆர். பிரியா, மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர். கௌஷிக், மண்டலக் குழுத் தலைவர் மு. சரிதா மகேஷ்குமார் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் உடனிருந்தனர்.

## குளித்தலையில் கூகுள் மேப் பார்த்து நடைபாலத்தில் சிக்கிய கார் மீட்பு

கரூர், ஆக.03-

குளித்தலை அருகே கூகுள் மேப் பார்த்து சென்றவரின் கார் நடை பாலத்தில் சிக்கியது. தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தைச் சேர்ந்தவர் முகமது(50). இவர் காரில் கோயம் புத்தூர் சென்றுவிட்டு மீண்டும் கும்பகோணத்துக்கு நேற்று காரில் திரும்பியுள்ளார்.

கரூரில் இருந்து திருச்சி செல்லும் வழியில் குளித்தலை அருகே தொழுகை நடத்துவதற்காக கூகுள் மேப் மூலம் பள்ளிவாசலை முகமது தேடியுள்ளார். அப்போது, குளித்தலை தென்கரை பாசன வாய்க்காலின் குறுக்கே உள்ள நடைபாலத்தை கடந்து செல்ல வேண்டும் என கூகுள் மேப் காட்டியுள்ளது.

இதையடுத்து, குறுகிய நடைபாதை வழியே முகமது காரை இயக்கியுள்ளார். இதில் காரின் முன்சக்கரம் பாலத்தின் விளிம்பில் கீழே இறங்கி, அந்தரத்தில் தொங்கியுள்ளது. வாய்க்காலில் அதிகளவில் தண்ணீர் செல்லும் நிலையில், அங்கிருந்தவர்கள் முகமதுவை காரில் இருந்து பத்திரமாக மீட்டனர். தொடர்ந்து, கிரேன் உதவியுடன் கார் நடைபாலத்தில் இருந்து பாதுகாப்பாக மீட்கப்பட்டது.

# மக்கள் பணியை செய்தால் அதுவே எனக்கு உடல் நலத்தை கொடுத்துவிடும்" : முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நெகிழ்ச்சி!

சென்னை, ஆக.3-

மக்களுடைய உடல்நலனைப் பாதுகாப்பதிலும் தமிழ்நாடுதான் நம்பர் ஒன்றாக இருக்கவேண்டும்!

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் (2.8.2025) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் சென்னை, சாந்தோம், செயின்ட் பீட்ஸ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில், தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் "நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு மருத்துவ முகாமினை தொடங்கி வைத்து, ஆற்றிய உரை:



நான் நன்றாக இருக்கிறேன்! நீங்கள் எல்லோரும் நன்றாக இருக்கிறீர்களா? சில நாட்களுக்கு முன்னால், காலையில் வாக்கிங் சென்றபோது, லேசாக தலைசுற்றல் இருந்தது. மருத்துவமனைக்கு சென்றபோது, மருத்துவர்கள் சில பரிசோதனைகள் செய்ய அங்கே அட்மிட்டாக சொன்னார்கள்!

மருத்துவமனையில் இருந்தபோதும், அரசு அதிகாரிகளிடம் தொடர்ந்து ஆலோசனை நடத்திக் கொண்டு தான் இருந்தேன். சில அவசர கோப்புக்களை கவனித்ததோடு, "உங்களுடன் ஸ்டாலின்" முகாம் எப்படி நடைபெறுகிறது என்று மாவட்ட ஆட்சியர்கள் ரூ பொதுமக்கள் என்று காணொலி வாயிலாக விசாரித்தேன்.

நான் துவக்கத்தில் கூறியதுபோல, மருத்துவமனை யிலிருந்து வீடு திரும்பிய பிறகு, நேற்று முன்தினம் தலைமைச் செயலக அலுவலகத்திற்குச் சென்று என்னுடைய வழக்கமான பணிகளை தொடங்கினேன். அப்போது என்னுடைய செயலாளர்கள் கூட சொன்னார்கள், "வெளி நிகழ்ச்சிகளை ஒரு வாரத்திற்கு தள்ளி வைக்கலாமா?" என்று கேட்டார்கள். "இல்லை, அதையெல்லாம் தள்ளி வைக்க வேண்டாம், மக்களைச் சந்தித்தால் தான் எனக்கு உற்சாகம் வரும் ரூ என்னுடைய உடலில் ஏதாவது நோய் இருந்தால் அது சரியாகிவிடும். எனவே, மக்கள் பணியை செய்தால், அதுவே எனக்கு உடல் நலத்தை கொடுத்துவிடும்" என்று சொல்லிவிட்டு தான் நான் இங்கு வந்திருக்கிறேன்.

மருத்துவமனையில் இருந்து வந்த பிறகு, கோட்டைக்கு வெளியே நான் கலந்து கொண்டு பேசுகின்ற முதல் நிகழ்ச்சி இது! நாட்டு மக்களுடைய நலன் காக்கும் நிகழ்ச்சி! நாட்டு மக்களுடைய நலன்தான், என்னுடைய நலன்!

நாம் ஆட்சி பொறுப்புக்கு வந்தபோது, என்ன நிலைமை இருந்தது என்று யாரும் மறந்திருக்க மாட்டீர்கள். கொரோனா இரண்டாவது அலை! ஆம்புலன்ஸ் தட்டுப்பாடு ஆக்சிஜன் சிலிண்டர் தட்டுப்பாடு என்று தமிழ்நாடே நெருக்கடியில் இருந்து தவித்துக் கொண்டிருந்தது. நான் உட்பட, அனைத்து அமைச்சர்களும், அப்போது மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்களாக மாறிவிட்டோம். தடுப்பூசி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, எல்லோரும் தடுப்பூசி போடுவதை உறுதி செய்தோம்!

அதேபோல, இன்றைக்கு கூட, இந்த "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்டத்தின் மூலமாக, அனைத்து அமைச்சர்களும் மீண்டும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்களாக மாறி அவர்களுடைய மாவட்டத்தில் முகாம்கள் தொடங்கி யிருக்கிறார்கள்!

கொரோனா காலத்தில், லாக்டவுனில் பொருளாதார ரீதியாக மக்கள் பாதிக்கப்படக் கூடாது என்று ஒவ்வொரு குடும்பத்திற்கும் இரண்டு தவணையாக நான்காயிரம் ரூபாய் வழங்கினோம். கொரோனாவை சிறப்பாக கட்டுப்படுத்தி, இதுதான் மக்களைக் காக்கும் உண்மையான அரசு என்று நிரூபித்தோம்!

அதுமட்டுமல்ல, கல்வியும் ரூ மருத்துவமும் இந்த ஆட்சியின் இரண்டு கண்கள் என்று சொல்லி, கல்விக்காகவும், அதே அளவுக்கு மருத்துவத்திற்காகவும் ஏராளமான திட்டங்களை செய்ய தொடங்கினோம்!

அதில் எல்லாவற்றையும் சொல்ல முடியாது ரூ நேரமில்லை. சிலவற்றை மட்டும் சொல்ல வேண்டும் என்றால், மக்களைத் தேடி மருத்துவம் இன்னுயிர் காப்போம்நம்மைக் காக்கும் 48 பாதம் பாதுகாப்போம் இதயம் காப்போம் சிறுநீரகம் காக்கும் சீர்மிகு மருத்துவ திட்டம் மக்களைத் தேடி ஆய்வக சேவைகள் நடப்போம் நலம் பெறுவோம் திட்டம், வணிகர்களை தேடி மருத்துவ திட்டம் தொழிலாளர்களைத் தேடி மருத்துவம் முதல்வர் மருந்தகம் என்று இன்னும் நிறைய திட்டங்கள் இருக்கிறது! நேரத்தின் அருமை கருதி, நான் சில திட்டங்களை மட்டும் இங்கே சொன்னேன்!

நம்முடைய அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள், இந்தத் துறையை மிகச் சிறப்பாக வழிநடத்திக் கொண்டு வருகிறார். அதுனால்தான், ஐ.நா. சபையே விருது கொடுத்து, மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தை பாராட்டியிருக்கிறது! என்னைப் பொறுத்தவரைக்கும், ஒரு திட்டத்தை கொண்டு வருகிறோம் என்றால், அது ஒவ்வொரு தனிமனிதரையும் சென்றடைய வேண்டும்! ஒரே ஒருவர் கூட விடுபட்டுவிடக் கூடாது! அதில் நான் மிகவும் கவனமாக இருக்கிறேன்.

அதனால்தான் உங்களுடன் ஸ்டாலின், நலம் காக்கும் ஸ்டாலின் போன்ற திட்டங்கள் மூலமாக, ஒவ்வொருவரின் தேவையையும் புரிந்து கொண்டு அவர்களுடைய எதிர்ப்பார்ப்பை பூர்த்தி செய்து கொண்டிருக்கிறோம்!

இன்றைக்கு தொடங்கி யிருக்கின்ற இந்த திட்டத்தில், தொடர்ந்து ஆயிரத்தி 256 முகாம்கள் நடைபெறப் போகிறது! சிறப்பு மருத்துவ வசதிகள் குறைவாக இருக்கின்ற ஊரகப் பகுதிகள், குடிசைப் பகுதிகள், பழங்குடியினர் அதிகம் வசிக்கின்ற பகுதிகளில் அவர்களுக்கெல்லாம் முன்னுரிமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்த முகாம்கள் நடத்தப்பட இருக்கிறது.

ஒவ்வொரு முகாம்களிலும், மருத்துவர்கள் உள்பட 200 மருத்துவப் பணியாளர்கள் இருப்பார்கள். 17 தனித்துவமான மருத்துவ சேவைகள் இந்த முகாம்களில் இருக்கும்.

சர்க்கரை மற்றும் உயர் இரத்த அழுத்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள், மனநல பாதிப்பு உடையவர்கள், இதய நோயாளிகள், கருவுற்ற தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள், வளர்ச்சி குன்றிய சிறப்புக் குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள், பழங்குடியினர் மற்றும் சமூக பொருளாதார ரீதியில் பின்தங்கிய மக்களுக்கு இந்த முகாம்களில் முன்னுரிமை வழங்கப்படும்.

முகாம்களில், அனைத்து பயனாளிகளுக்கும் இரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, முழுமையான இரத்த அணுக்கள் எண்ணிக்கை, இரத்த சர்க்கரை அளவு, சிறுநீரக செயல்பாட்டு சோதனைகள் செய்யப்பட இருக்கிறது.

பொது மருத்துவ நிபுணர் அறிவுறுத்தலின்படி, ணி.சி.நி, எக்கோ, ஙீஸிணீஹ், ஸ்கேன், காசநோய் மற்றும் தொழுநோய் பரிசோதனைகள், பெண்களுக்கான கருப்பை வாய் புற்றுநோய் மற்றும் மார்பகப் புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகளும் செய்யப்பட இருக்கிறது.

இந்த முகாமின் சிறப்பம்சம் என்று நான் சொல்வது, உங்கள் டெஸ்ட் ரிப்போர்ட் அனைத்தும் மொத்தமாக ஃபைல் செய்து உங்களிடம் வழங்கிவிடுவோம். இந்த ரிப்போர்ட், உங்களுடைய 'மெடிக்கல் ஹிஸ்டரி' போன்றது! எதிர்காலத்தில், நீங்கள் எந்த ட்ரீட்மெண்ட்டிற்கு சென்றாலும், எந்த ஹாஸ்பிட்டலுக்கு சென்றாலும், இந்த ரிப்போர்ட் உங்களுக்குப் பயன்படும்!

இந்த முகாம்கள் மூலமாக, இதில் பயனடைகின்ற எல்லோருடைய நலனும் பாதுகாக்கப்படும் என்ற உறுதியை நான் அளிக்கின்றேன்.

நம்முடைய அரசின் குறிக்கோள், நகர்ப்புறத்தில், நன்றாக படித்து, வசதியானவர்களுக்கு கிடைக்கின்ற மருத்துவ சேவை கிராமப்புறத்தில் இருக்கின்ற ஏழை எளிய பாமர மக்களுக்கும் கிடைக்கவேண்டும். அதை உறுதி செய்வோம்!

தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக்கும், மருத்துவ உள்கட்டமைப்பு வசதி கிராமப்புறங்கள் வரை பரவலாகிவிட்டது. மருத்துவமனைகளை நோக்கி வர முடியாதவர்களுக்கும் மருத்துவச் சேவைகளை கொண்டு போகவேண்டும் என்பதுதான் இதுபோன்ற முகாம்களை நாம் நடத்துகின்றோம். இதை மக்கள் எல்லோரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையமுடியும். அப்படி நம்முடைய உடல்நலம் நன்றாக இருந்தால்தான் நம்மால் மகிழ்ச்சியாக வாழமுடியும் ரூ உழைக்க முடியும் ரூ சாதிக்க முடியும்.

மருத்துவர்களுக்கு நான் சொல்லிக் கொள்வது என்னவென்றால், சில நாட்களுக்கு முன்னால், நம்முடைய மானமிகு திராவிட இயக்கத்தின் ஆசிரியர் அய்யா அவர்கள், எனக்கொரு கடிதம் எழுதியிருந்தார். அதில், மருத்துவமனைக்கு வருகின்றவர்களை நோயாளிகள் என்று அழைக்க கூடாது என்று குறிப்பிட்டிருந்தார். அதுவும் சரிதான்! ஏனென்றால், எல்லோருக்கும் உடலில் ஏதாவது ஒரு சிறிய பிரச்சினை இருக்கும்; அதற்காக அவர்களை நோயாளி என்று சொல்லக்கூடாது!

மருத்துவர்களையும் மருத்துவமனைகளையும் நாடி வருகின்றவர்கள் "மருத்துவப் பயனாளிகளாக" நாம் பார்க்க வேண்டும்! இந்த முகாம்களுக்கு வருகின்ற மக்களையும், மருத்துவப் பயனாளிகளாகதான் நீங்கள் பார்க்க வேண்டும்!

அடுத்து, மருத்துவப் பணியாளர்களுக்கு நான் சொல்லிக் கொள்வது, உங்கள் குடும்பங்களில் ஒருவர் வந்தால் எப்படி கவனித்துக் கொள்வீர்களோ, அதேபோல, இந்த முகாம்களுக்கு வருகின்றவர்களையும் அக்கறையுடன் பரிவுடன் நீங்கள் கவனித்துக் கொள்ள வேண்டும்!

அதேபோல, மக்கள் பிரதிநிதிகளுக்கும், அரசு அதிகாரிகளுக்கும், ஊடக நண்பர்களுக்கும் நான் சொல்லிக் கொள்வது, இந்த முகாம்கள் உங்கள் பகுதிகளில் என்றைக்கு நடைபெறுகிறது? என்னென்ன சேவைகள் வழங்கப்படுகிறது என்று நீங்கள்தான் மக்களிடம் கொண்டு போய் சேர்க்க வேண்டும்! அவர்கள் பயன்பெற அத்தனை உதவிகளையும் நீங்கள் செய்யவேண்டும்!

நீங்கள் ஏற்படுத்துகின்ற விழிப்புணர்வால், ஒருவருடைய உயிர் காப்பாற்றப்படலாம். ஒரு குடும்பத்தின் எதிர்காலம் பாதுகாக்கப்படலாம். எனவே, இதில் உங்களுடைய பங்களிப்பும் மிகவும் அவசியம்! எதிலும், எப்போதும் தமிழ்நாடுதான் நம்பர் ஒன்றாக இருக்கவேண்டும்! இதுதான் என்னுடைய விருப்பம்! அப்படி, மருத்துவச் சேவைகள் வழங்குவதிலும், மக்களுடைய உடல்நலனைப் பாதுகாப்பதிலும் தமிழ்நாடுதான் நம்பர் ஒன்றாக இருக்கவேண்டும்! இதுபோன்ற திட்டங்களால் அது நிச்சயம் நிறைவேறும் என்ற நம்பிக்கையுடன் நலமான உங்களுடைய வாழ்வுக்கு வாழ்த்துகளைச் சொல்லி விடைபெறுகிறேன்.

## ரஷ்ய உறவு பாதிக்கப்படாது: இந்தியா திட்டவட்டம்

புதுடெல்லி, ஆக.03-

ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்தால் இந்தியாவுக்கு அபராதம் விதிக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

இதுகுறித்து டெல்லியில் மத்திய வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் நேற்று கூறியபோது, ''இந்தியா ரஷ்யா உறவு வலுவானது. மூன்றாம் நாட்டின் தலையிட்டால் இந்த உறவு பாதிக்கப்படாது. இதேபோல இந்தியா அமெரிக்கா உறவும் வலுவடைந்து வருகிறது. நாட்டின் நலனுக்கு தேவையான



பாதுகாப்பு கொள்கையை கடைபிடித்து வருகிறோம்'' என்றார். அமெரிக்கர்களின் வீட்டு செலவு அதிகரிக்கும் இதற்கிடையே, அமெரிக்காவின் புதிய வரிவிதிப்பு நடவடிக்கையால் ஏற்படும் பணவீக்கம் காரணமாக அமெரிக்காவில் சராசரி குடும்பத்தினரின் வீட்டு செலவு ஆண்டுக்கு 2,400 டாலர்வரை அதிகரிக்கும். அமெரிக்க பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளது என்று எஸ்பிஐ அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. குறிப்பாக அமெரிக்காவில் மின்னணு பொருட்கள், ஆட்டோமொபைல் உதிரி பாகங்கள், நுகர்வோர் பொருட்கள் ஆகியவற்றின் விலை உயரும் என்று கூறப்படுகிறது.



கூடுவாஞ்சேரி, காயிரம்பேடு தலித் ஊராட்சி மன்ற தலைவர் குடும்பத்தினர்கள் மீது தாக்குதல்

# வி.சி.க செங்கல்பட்டு வடக்கு மாவட்டம் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

கூடுவாஞ்சேரி, ஆக.03-

செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்குளத்தூர், ஒன்றியத்திற்குட்பட்ட கூடுவா ஞ்சேரி பேருந்துநிலையம் அருகில் ஆகஸ்ட் (2) காலை (11) மணிக்கு, காயிரம்பேடு ஊராட்சி மன்ற தலைவர், ஜெயகாந்திபுஷ்பராஜ் அவரது கணவர், மகன்கள் கடையில் ஜூஸ் குடித்துக் கொண்டிருந்த நேரத்தில் சாதி ரீதியான கொலை வெறி தாக்குதலில் ஈடுபட்ட அதிமுக முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர், தற்போது துணை தலைவருமான, திருவாக்கு அவரது உறவினர்கள், நண்பர்களுடன் இணைந்து தலித் இனத்தைச் சேர்ந்த நீ எல்லாம் ஊராட்சி மன்ற தலைவரா என்று கொலை வெறி தாக்குதலில் ஈடுபட்டது மட்டுமல்லாமல் காவல்துறைக்கு முன்கூட்டியே முந்திக் கொண்டு புகார் செய்துள்ளனர். பாதிக்கப்பட்ட ஊராட்சி மன்ற தலைவர், ஜெயகாந்திபுஷ்பராஜ் கூடுவாஞ்சேரி காவல் துறையில் புகார் அளித்தோம் ஒரு வாரம் ஆகியும் கைது செய்யாததால் விடுதலை சிறுத்தை கட்சி சார்பாக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் கூடுவாஞ்சேரி பேருந்துநிலையம் அருகில்

செங்கல்பட்டு மாவட்ட வடக்கு செயலாளர், கேது (எ)தே. தென்னவன் தலைமை நடைபெற்றது. வரவேற்புரை: மறைமலைநகர், நகர துணைச் செயலாளர், ச. தலித்சுதாகரன், கண்டன உரை: தலைமை நிலைய செயலாளர், அ.பாலசிங்கம் மாநில. து. பொ. செ. வாழ. ச. ரஜினிகாந்த்,

மண்டல து. செயலாளர், செங்கை, இரா. தமிழரசு, சிபிஎம் மாவட்ட செயலாளர், ப.சு.பாரதி அண்ணா, வட்டசெயலாளர், கே. சேஷாத்தரி, நகர செயலாளர், கே. சம்பத், சென்னை மேலிட பொருளாளர், சூ. க. விடுதலைச்செழியன், மா. து .செயலாளர் ,கராத்தே. பாண்டியன், வழக்கறிஞர், சீ. சொக்கலிங்கம், இ. எ.பா.மா.அமைப்பாளர், த. சந்தானன் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய ,நகர, நிர்வாகிகள் கலந்து கொண்டு

ஆர்ப்பாட்டத்தில் முக்கிய குற்றவாளியான அ.தி.மு.கவை சேர்ந்த திருவாக்கு உடனடியாக விசிக கட்சியினர் கைது செய் கைது செய் கைது என்று கோஷங்களை எழுப்பி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நன்றி உரையாக : கூடுவாஞ்சேரி நகர செயலாளர் ,திராவிட முரளி மற்றும் பெண்கள் , பொதுமக்கள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது..

# வேலூர் மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் தரமான உணவு வழங்காமல் பல்வேறு முறைகேடுகள்

## கண்டுகொள்ளாத மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி

வேலூர், ஆக.03-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, தோட்டப்பா ளையம், வேலூர் மாநகராட்சி மண்டலம் 2, வார்டு எண் 29, 30, எட்டாம்மாள் பள்ளியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் தரமற்ற உணவுப் பொட்டலங்கள் வழங்கப்படுகின்றனர். வேலூர் மாநகராட்சிக்கு உட்பட்ட 60 வார்டுகளிலும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் தொகுதி வாரியாக நடைபெற்று வருகிறது. இதில் தமிழக அரசு இந்த திட்டத்தை செயல்முறை படுத்த சுமார் ரூ230கோடிக்குமேல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த திட்ட முகாம் அமைப்புகளை செயல்படுத்த ஒப்பந்ததா ரர்களிடம் ஒப்பந்தம் கொடுக் கப்பட்டு இந்த அமைப்புகளை அமைப்பதற்கு ஒப்பந்த தாரரை நியமிக்கப்பட்டுள்ளனர். இதில் பணியாற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு உணவு வழங்கப்படுகிறது. இதில் வெரைட்டி கலர் ரைஸ் ரூபாய் 30 மற்றும் கண்டைனர் ஐந்து ரூபாய் ஆக மொத்தம் 35 ரூபாய் செலவில் ஆரோக்கியமற்ற கலர் சாதம் உணவு பொட் டலங்கள் கொடுக்கப்படுகிறது. இங்கு காலை முதல் மாலை வரை உட்கார்ந்த இடத் திலிருந்து பணி செய்யும் பணியாளர்களுக்கு தரமற்ற உணவுகளை தருவதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. இதனை மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி முறையாக கண்காணிக்காமல் அலட்சியம் காட்டி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. அனைத்து துறை தலைமை செயலர்களும், தலைமைச் செயலாளரும் மற்றும் தமிழக அரசும் இதனை முழுமையாக கண்காணிக்கப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள பாதிக்கப்பட்டவர்கள் இந்த தரமற்ற ஆயில் உபயோகித்து தரமற்ற முறையில் கலர் வேரட்டி பிரைஸ் ரைஸ் கேஸ்ட்ரிக், வயிற்று வலி, பல்வேறு வயிற்றுப் போக்கு பிரச்ச னைகள் என பல்வேறு உபாதைகள் உள்ளதாக, முறையாக முழுமையாக பணி செய்ய முடியாத ஒரு நிலையில் இருப்பதாக பாதிக்கப்பட்ட பணியாளர்கள் அனைவரும் வேதனை தெரிவித்து வருகின்றனர்.



■ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலி காட்சி வாயிலாக, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் தொடங்கி வைக்கப்பட்டுள்ள நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட தொடக்க விழாவில், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கீழசேவல்பட்டி எஸ்.எம்.எஸ் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற விழாவில் பங்கேற்று சிறப்பித்து, மருத்துவ முகாமினை குத்துவிளக்கேற்றி வைத்து தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி.இ.ஆ.ப.. அவர்கள், சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.சத்தியபாமா, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.எஸ்.மீனாட்சி உட்பட பலர் உள்ளனர்.

# ரூ.1,84,41,328 மதிப்புள்ள ரேசன் பொருட்கள் கடத்தல்

சென்னை, ஆக.03-

ஏழை, எளிய மற்றும் நடுத்தர குடும்பத்தினர் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு அரசு பொது விநியோகத் திட்டத்தின் மூலம் அத்தியாவசியப் பண்டங்களை விநியோகம் செய்து வருகிறது. அவ்வாறு, விநியோகம் செய்ய ப்படும் அத்தியாவசியப் பண்டங்களை சிலர் முறைகேடாக கடத்தி கள்ளச்சந்தையில் விற்று அதிக லாபம் ஈட்டும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகின்றனர். குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையின் அலுவலர்கள் தொடர் ரோந்து பணி மேற்கொண்டு, அத்தியாவசியப் பண்டங்கள் கடத்தல் மற்றும் பதுக்கலில் ஈடுபடும் நபர்கள் மற்றும் அதற்கு உடந்தையாக செயல்படும் நபர்கள் மீதும், கடத்தலுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள் மீதும் இன்றிய மையாப் பண்டங்கள் சட்டம் 1955 ன்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டு உரிய மேல்நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், தொடர் குற்றச்செ சயல்களில்




ஈடுபடும் நபர்களை கள்ளச்ச ந்தைத் தடுப்பு மற்றும் இன்றியமையாப் பண்டங்கள் வழங்கல் பராமரிப்புச் சட்டம் 1980 ன்படி தடுப்புகாவலில் வைக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்படி, 01/01/2025 முதல் 31/07/2025 வரை குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையில் மொத்தம் 6,025 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கூறிய வழக்குகளில், 2,342 டன் பொது விநியோகத் திட்ட அரிசி, 13,720 லிட்டர் பொது விநியோகத் திட்ட மண்ணெண்ணெய், 1,725 சமையல் எரிவாயு உருளைகள் மற்றும் இதர 64 வழக்குகளுடன் அத்தியாவசியப் பண்டங்கள் கைப்பற்றப்பட்டுள்ளது. மேற்கூறிய வழக்குகளில் கைப்பற்றப்பட்ட பொருட்களின் மொத்த மதிப்பு ரூ. 1,84,41,328/ (ஒரு கோடியே என்பத்து நான்கு லட்சத்து நாற்பத்தோராயிரத்து முனூற்று இருபத்து எட்டு) ஆகும். இக்குற்றங்களில் ஈடுபட்ட 6,272 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். பொது விநியோகத்திட்ட பொருட்களை கடத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட 1,362 வாகனங்கள் பறிமுதல் செய்ய ப்பட்டுள்ளன, மேலும் கடத்தலில் பயன்படுத்தப்பட்ட 2,880 வாகனங்கள் அரசுக்கு அபராதத் தொகை செலுத்திய பின் விடுவி க்கப்பட்டுள்ளன. கள்ளச்சந்தைத் தடுப்பு மற்றும் இன்றியமையாப் பண்டங்கள் வழங்கல் பராமரிப்புச் சட்டத்தின் கீழ் 70 நபர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள். இன்றியமையாப் பண்டங்கள் கடத்தல் மற்றும் பதுக்கல் தொடர்பாக பொது மக்கள் புகார் அளிக்க 1800 599 5950 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணை 24 மணி நேரமும் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.





# மண்ணிவாக்கம் ஊராட்சி அதிமுக சார்பில் அண்ணா ஆட்டோ ஓட்டுநர் நல சங்கம் திறப்பு விழா

மண்ணிவாக்கம், ஆக்.03-

செங்கல்பட்டு மாவட்டம் மண்ணிவாக்கம் ஊராட்சியில், அதிமுக சார்பில் அண்ணா ஆட்டோ ஓட்டுநர் நல சங்கம் திறப்பு விழா மண்ணிவாக்கம் முடிச்சூர் சாலை ஓரத்தில் நேற்று நடைபெற்றது. இதில் அதிமுக மாவட்ட கவுன்சிலரும், காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளருமான கஜா என்ற கஜேந்திரன் தலைமை தாங்கினார். இதில் மாவட்ட பிரதிநிதி சாந்தி புருஷோத்தமன் மாவட்ட எம் ஜி ஆர் மன்ற துணைத் தலைவர் துளசிங்கம் வடக்கு ஒன்றிய அண்ணா தொழிற்சங்க செயலாளர் வண்டலூர் செங்கோட்டுவன், காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய இளைஞரணி அவைத் தலைவர் மற்றும் 7வது வார்டு உறுப்பினருமான எல்.நாகராஜன், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் பொன் தர்மராஜ், சங்கத் தலைவர் முருகன் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி பொருளாளர் பாக்கியராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளராக முன்னாள் எம்பியும், செங்கல்பட்டு மேற்கு மாவட்ட செயலாளருமான சிட்லபாக்கம் ராஜேந்திரன், அண்ணா தொழிற்சங்க பேரவை செயலாளர் கமலகண்ணன் ஆகியோர் கலந்துகொண்டு, அண்ணா ஆட்டோ ஓட்டுனர் நல சங்கம் பெயர் பலகையை திறந்து வைத்து 34 ஆட்டோ டிரைவர்கள் மற்றும் பொதுமக்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கினார் இதில், அண்ணா தொழிற்சங்க மாவட்ட செயலாளர் விஜய் சங்கர், மாவட்ட தலைவர் சரவணன்ராஜ், 5வது வார்டு உறுப்பினர் மாவிரன், மற்றும் மண்ணிவாக்கம் கிளைக் கழக செயலாளர் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# கொங்கணாபுரம் சந்தையில் ரூ.8 கோடிக்கு வர்த்தகம்: 13,500 ஆடுகள் விற்பனை



இடைப்பாடி, ஆக.03-

சேலம் மாவட்டம் இடைப்பாடி அருகே கொங்கணாபுரத்தில் வாரச்சந்தை இன்று கூடியது. சேலம், நாமக்கல், ஈரோடு, தர்மபுரி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் இருந்து விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் 13,500 ஆடுகள், 2,300 பந்தய சேவல் மற்றும் கோழி, 1.30 டன் காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். தமிழகம் மட்டுமின்றி கர்நாடகா, ஆந்திரா, கேரளாவில் இருந்தும் வியாபாரிகள் வந்து ஆடு, கோழிகளை வாங்கி சென்றனர்.

10 கிலோ முதல் 40 கிலோ வரை எடை உள்ள வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகள் ரூ.6000 முதல் ரூ.39,000 வரை விலை போனது. பந்தய சேவல் ரூ.2500 முதல் ரூ.3500 வரை விற்கப்பட்டது. ஆடி பண்டிகையையொட்டி ஆடு, கோழிகள் விற்பனை அதிகாலை முதலே களைகட்டியது. சந்தையில் இன்று ரூ.8 கோடிக்கு வர்த்தகம் நடந்ததாக வியாபாரிகள் தெரிவித்தனர். இதேபோல் காய்கறிகளின் விற்பனையும் களைகட்டியது.



# வேலூர் கோட்டை மாநகர் லயன்ஸ் சங்கம் சார்பில் முப்பெரும் விழா

வேலூர், ஆக.03-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, சத்துவாச்சாரி, ஸ்ரீ புவனேஸ்வரி மஹாலில், வேலூர் கோட்டை மாநகர் லயன்ஸ் சங்கம் சார்பில் பதவி ஏற்பு, புதிய உறுப்பினர்கள் இணைத்தல் மற்றும் நலதிட்டங்கள் வழங்குதல் என முப்பெரும் விழா, வேலூர் கோட்டை மாநகர் லயன்ஸ் சங்க மு.தலைவர் பி.கார்த்திகேயன், முன்னாள். மாவட்ட தலைவர் வி.ரத்தினச பாபதி, புதிய உறுப்பினர்களை இணைத்து கனிவுரை வழங்கும் ஆர்.ஹரிதாஸ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக லயன்ஸ் டி.எஸ்.உதயச ங்கர், கே.அய்யனாரப்பன், எம்.கே.பொன்னம்பலம் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கி வாழ்த்து தெரிவித்து விழாவை சிறப்பித்தனர். மேலும், சிறப்பு விருந்தினர்களாக வாரியார் தாசன், முள்ளு கத்திரிக்காய்க்கு புகழ்பெற்ற இலவம்பாடி. கவிஞர்.லக்குமிபதி சிறப்புரையில், லயன்ஸ் எஸ்.சீனிவாசன், வெங்கடபதி, தேவராஜ், அருண்குமார், சரளா சண்முகசுந்தரம், சுமதி மனோகரன், இயக்குனரும் ஒருங்கிணைப்பாளருமான சண்முகசுந்தரம், மணிபாரதி, பி.கார்த்திகேயன், டி.ஞானகுமார், ஏ.சி.என். அமர்நாத் ஆகியோர் வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தனர். இதனைத் தொடர்ந்து லயன்ஸ் சங்கம் சார்பில் மக்கள் பணியில் முழுவீச்சுடன் ஈடுபடுவோம் நேர்மையுடன் செயல்படுவோம் மக்கள் பணிகளை செய்வோம் என உறுதிமொழி ஏற்பும் நடைபெற்றது.இவ்விழாவில் புதிய பொறுப்பாளர்கள் பணியேற்பு விழா, புதிய தலைவராக டி.ஞானகுமார், புதிய செயலாளராக ஏ.சி.என்.அமர்நாத், புதிய பொருளாளராக எஸ்.எஸ். சரவணன் ஆகியோருக்கு பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து கௌரவித்து பதவிற்றனர். இதனைத் தொடர்ந்து நல திட்ட விழாவாக தூய்மை பணியாளர்களுக்கு சேலை வழங்குதல், பள்ளி மாணவ மாணவியர்களுக்கு நோட்டு புத்தகம் வழங்குதல், ஏழை எளிய மக்களுக்கு அரிசி, பருப்பு எண்ணெய் அடங்கிய மளிகை தொகுப்பு வழங்குதல், தேசிய மாநில அளவில் சிலம்பப் போட்டியில் பரிசு வென்ற மாணவ மாணவியர்களுக்கு நினைவு பரிசு வழங்கி ஊக்குவித்தல் ஆகியவை நடைபெற்றது. இறுதியில் வேலூர் கோட்டை மாநகர லைன்ஸ் சங்கம் செயலாளர் ஏ.சி.என். அமர்நாத் நன்றியுரையாற்றி விழா நிறைவுபெற்றது.





# காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரியில் நிதி மேலாண்மை பயிலரங்கு

காரைக்குடி, ஆக.03-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி, அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் இளையோர் செஞ் சிலுவை சங்கத்தின் சார்பாக நிதி மேலாண்மை குறித்த விழிப்புணர்வுப் பயிலரங்கு கல்லூரியின் உமையாள் கலையரங்கில் நடைபெற்றது. கல்லூரியின் முதல்வர் முனைவர் வசந்தியின் வழிகாட்டுதலில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு வரலாற்றுத் துறைத்தலைவர் முனைவர் நிலோபர் பேகம் தலைமை வகித்தார். புவியமைப்பியல் துறைத்தலைவர் முனைவர் உதய கணேசன் வரவேற்புரை ஆற்றினார். இந்திய செஞ்சிலுவைச் சங்க சிவகங்கை மாவட்டத் தலைவர் நல்லாசிரியர் சுந்தரராமன் முன்னிலை வகித்தார். அழகப்பா பல்கலைக்கழக இளையோர் செஞ்சிலுவைச் சங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் விநாயகமூர்த்தி மற்றும் இளையோர் செஞ் சிலுவைச்சங்க மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் பரிதாபேகம், சிவகங்கை மாவட்ட இந்திய செஞ்சிலுவை சங்கத்தின் ரத்ததான ஒருங்கிணைப்பாளர் செங்கையா ராமசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட அபுதாபி நாட்டு மேனாள் வணிக வங்கி அதிகாரி குமார் முத்தையா நிதிக்கல்வி என்ற தலைப்பில் சேமிப்பு குறித்தும், வங்கியில் வழங்கப்படும் பல்வேறு சேவைகள் குறித்தும் விளக்கிப் பேசி நிதி மேலாண்மை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தினார். கல்லூரியின் இளையோர் செஞ்சிலுவை சங்க ஒருங்கிணைப்பாளர் முனைவர் பாரதி ராணி நன்றி கூறினார். இந்நிகழ்வில் பேராசிரியர்கள் மற்றும் மாணவ மாணவியர் பங்கேற்று சிறப்பித்தனர்.



# அபினய்க்கு பாலா நிதியுதவி: இணையத்தில் குவியும் பாராட்டு

நடிகர் அபினய்க்கு பாலா நிதியுதவி வழங்கி வெளியிட்டுள்ள வீடியோ பதிவுக்கு இணையத்தில் பாராட்டுகள் குவிந்து வருகிறது.

'துள்ளுவதோ இளமை' படத்தின் மூலம் நடிகராக அறிமுகமானவர் அபினய். அப்படத்துக்கு கிடைத்த வரவேற்பைத் தொடர்ந்து, பல்வேறு படங்கள் நடித்து வந்தார். பின்பு பட வாய்ப்புகள் இல்லாமல் முடங்கினார். அவருடைய உடல்நிலையும் அவருக்கு ஒத்துழைக்கவில்லை.

சமீபத்தில் அபினய்க்கு கல்லீரல் பாதிப்பு ஏற்பட்டு, சிகிச்சைக்கு பணமில்லாமல் தவித்து வந்தார். இதை அறிந்த நடிகர் பாலா அவரை நேரில் சந்தித்து 1 லட்ச ரூபாய் வழங்கியுள்ளார். இந்த வீடியோ பதிவினையும் தனது இன்ஸ்டாகிராம் பதிவில் வெளியிட்டுள்ளார்.

இந்த வீடியோ பதிவை ஒட்டி இணையத்தில் பலரும் பாலாவுக்கு பாராட்டு தெரிவித்து வருகிறார்கள். மேலும், அபினய் சீக்கிரம் குணமாகி நடிப்புக்கு திரும்ப வேண்டும் என்று தெரிவித்து வருகிறார்கள்.




# மதராஸி படத்தில் சலம்பல பாடல் வெளியானது

ஏ.ஆர்.முருகதாஸின் இயக்கத்தில், சிவகார்த்திகேயன் நடிப்பில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கும் படமான ''மதராஸி'' படத்திலிருந்து முதல் பாடலான "சலம்பல" பாடலை ஜங்கிலீ மியூசிக் வெளியிட்டுள்ளது. அனிருத் இசையமைத்த இந்தப் பாடல், இந்த ஜோடியின் 8வது படத்தில், ரசிகர்களின் ஃபேவரைட்டாக வெளியாகியுள்ளது. துடிப்பான குரல் மற்றும் பன்முக வித்தகராக, வளர்ந்து வரும் இளம் இசையமைப்பாளர் சாய் அபயங்கர் தனது குரலில், துடிதுடிப்பான "சலம்பல" பாடலை பாடியுள்ளார்.

அனிருத் கூறுகையில், ''நாங்கள் வழக்கமான பிரேக்அப் பாடல் மனநிலையிலிருந்து விடுபட்டு ''சலம்பல'' பாடலை, மாறுபட்ட பாடலாக உருவாக்க விரும்பினோம். இது வித்தியாசமான, கணிக்க முடியாத பாடலாக இருக்கும், மேலும் எஸ்.கே. உடன் இணைவது எப்போதும் மிரட்டலான ஒன்றாக இருக்கும். இயக்குநர் முருகதாஸின் தொலைநோக்குப் பார்வை மிகத் தெளிவாக இருந்தது'' என்றார்.




# நடிகைக்கு மனநல பிரச்சினை: தந்தை போலீஸில் புகார்

தெலுங்கில் பல படங்களில் நடித்துள்ள கல்பிகா கணேஷ், தமிழில் 'பரோல்' படத்தில் நடித்துள்ளார். இவர் சமீபகாலமாக அடிக்கடி சர்ச்சையில் சிக்கி வருகிறார். ஹைதராபாத்தில் உள்ள பப் ஒன்றுக்கு நண்பர்களுடன் சென்ற இவர், அங்கு ஊழியர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டு, பொருட்களைச் சேதப்படுத்தியதாக பப் நிர்வாகம் புகார் அளித்தது. இதனால் போலீஸார் அவர் மீது வழக்குப் பதிவு செய்தனர்.

பின்னர், இன்ஸ்டாகிராமில், தகாத வார்த்தைகளால் திட்டியதாக இளம் பெண் ஒருவர், சைபராபாத் போலீசில் கல்பிகா மீது புகாரளித்தார். இதுதொடர்பாக அவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு, பிரச்சினை நீதிமன்றம் வரை சென்றுள்ளது. சமீபத்தில் ஹைதராபாத்தில் உள்ள ரிசார்ட் ஒன்றுக்குச் சென்ற அவர், அங்குள்ள மெனு கார்டுகளை வீசி, ரகளை செய்ததாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில் தனது மகள் மனநலப் பிரச்சினையில் சிக்கி இருப்பதாக அவருடைய தந்தை சங்கவர் கணேஷ், கச்சுபவுலி போலீஸில் புகார் அளித்துள்ளார். அதில், ''கல்பிகா கடுமையான மனநலப் பிரச்சினையால் போராடி வருகிறார். அது அவருக்கும் தங்களுக்கும் பொதுமக்களுக்கும் பிரச்சினைகளை ஏற்படுத்தி வருகிறது. அவர் இரண்டு முறை தற்கொலைக்கு முயன்றுள்ளார். மருத்துவர்கள் பரிந்துரைத்த மருந்துகளை 2 ஆண்டுகளுக்கு முன்பே நிறுத்திவிட்டார். மன உளைச்சலால் தொடர்ந்து பிரச்சினைகளை ஏற்படுத்தி வருகிறார். அவரை மறுவாழ்வு மையத்தில் சேர்க்க வேண்டும்'' என கூறியுள்ளார்.

# சினிமா விமர்சனம்: சரண்டர்



சென்னை சூளைமேடு காவல் நிலையத்தில் பயிற்சி எஸ்ஐ ஆக தர்ஷன், சில மாதங்களில் ஓய்வுபெற இருக்கும் சீனியர் கான்ஸ்டபிள் லால் பணியாற்றுகின்றனர். ஒரு வாரத்தில் தேர்தல் நடக்கவுள்ள நிலையில், அப்பகுதியில் வசிப்பவர்கள் சொந்த துப்பாக்கிகளை காவல் நிலையத்தில் சரண்டர் செய்கின்றனர். அதில் சினிமா நடிகர் மன்சூர் அலிகானும் ஒருவர். அவரது துப்பாக்கியை லாக்கரில் வைக்கிறார் லால். அந்த துப்பாக்கி திடீரென்று காணாமல் போகிறது.

அதை தேடும் பணியில் தர்ஷன் ஈடுபடுகிறார். ஏரியா ரவுடி சுஜித் சங்கர், 10 கோடி ரூபாயை தேர்தல் நிதியாக ஒரு அரசியல் கட்சிக்கு கொடுக்கிறார். திடீரென்று பணம் காணாமல் போகிறது. துப்பாக்கியும், பணமும் கிடைத்ததா? இரு சம்பவங்களுக்கும் என்ன தொடர்பு என்பது மீதி கதை. முழுநீள கிரைம் சஸ்பென்ஸ் திரில்லரை செம விறுவிறுப்பாகவும், பரபரப்பாகவும் இயக்கிய கவுதமன் கணபதிக்கு பாராட்டுகள். தர்ஷன் இயல்பாக நடித்துள்ளார்.

லாலுக்கு உதவ, ரவுடிகளுடன் துணிச்சலாக மோதியிருக்கிறார். மாறுபட்ட வில்லனாக சுஜித் சங்கர், நேர்மையான போலீசாக லால், மனிதநேயம் கொண்ட போலீஸ் அதிகாரியாக அருள் டி.சங்கர் கவனத்தை ஈர்க்கின்றனர். மன்சூர் அலிகான், ரம்யா ராமகிருஷ்ணன், முனீஷ்காந்த், பாடினி குமார், கவுசிக், சுந்தரேஸ்வரன் ஆகியோரும் இயல்பாக நடித்துள்ளனர்.

விகாஸ் படிஷாவின் பின்னணி இசை, காட்சிகளை விறுவிறுப்பாக நகர்த்தியுள்ளது. மெய்யேந்திரனின் ஒளிப்பதிவு கூடுதல் பலம் சேர்த்துள்ளது. காவலர்களின் ஈகோ மோதல், தேர்தல் பரபரப்பு, வில்லன் கோஷ்டியின் அலப்பறை மற்றும் துரோகத்தை கவுதமன் கணபதி சிறப்பாக கையாண்டுள்ளார். போலீசார் அனைவருமே வில்லனுக்கு முன் பெட்டிப்பாம்பு மாதிரி அடங்கி இருப்பதாக காட்டுவது நெருடுகிறது.

# இந்திய கால்பந்து அணியின் புதிய பயிற்சியாளர் காலித் ஜமீல் முன் உள்ள சவால்கள் என்னென்ன?



இந்திய கால்பந்து அணியின் தலைமை பயிற்சியாளராக காலித் ஜமீல் நியமிக்கப்பட்டுள்ளார். இதன் மூலம் இந்திய அணியின் புதிய நம்பிக்கையாக அவர் அறியப்படுகிறார்.

இந்திய கால்பந்து தலைமை பயிற்சியாளர் பணிக்கு பெரும்பாலும் வெளிநாட்டைச் சேர்ந்தவர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டது. கடந்த 1993 முதல் இதுநாள் வரையில் இந்தியாவை சேர்ந்த சுக்விந்தர் சிங் மற்றும் சவியோ மெடிரா ஆகியோர் மட்டுமே அணியின் தலைமை பயிற்சியாளராக இருந்துள்ளனர். கடந்த 30 ஆண்டுகளில் ஸ்பெயின், இங்கிலாந்து, குரோஷியா, நெதர்லாந்து உள்ளிட்ட நாடுகளை சேர்ந்தவர்களை பயிற்சியாளராக நியமித்து இருந்தது இந்திய கால்பந்து நிர்வாகம். தற்போது அதை மாற்றிக் கொண்டு காலித் ஜமீல் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

யார் இவர்? 48 வயதான காலித் ஜமீல், குவைத் நாட்டில் பிறந்தவர். நடுகள வீரர். சர்வதேச அளவில் இந்திய அணிக்காக விளையாடி உள்ளார். கடந்த 2009 முதல் பயிற்சியாளராக தனது பணியை அவர் தொடங்கினார்.

வீரராகவும், பயிற்சியாளராகவும் டாப் டிவிஷனல் தொடரில் பட்டம் வென்றுள்ளார். இந்தியன் சூப்பர் லீக், ஐ லீக் மற்றும் ஐ லீக் 2 உள்ளிட்ட தொடர்களில் பல்வேறு அணிகளை பயிற்சியாளராக வழி நடத்தி உள்ளார். ஜாம்ஷெட்பூர் கால்பந்து கிளப் அணியின் பயிற்சியாளராக இயங்கி அந்த அணியை சூப்பர் கப் 2025 சீசனில் இரண்டாம் இடம் வரை பெறச் செய்தார்.

மஹிந்திரா யுனைடெட் அணியில் இருந்து தொழில்முறை சார்ந்த அவரது கால்பந்து விளையாட்டு பயணம் தொடங்கியது. 2003 மற்றும் 2005ல் ஃபெடரேஷன் கோப்பை, 2006 ல் நேஷனல் ஃபுட்பால் லீக் மற்றும் ஐஎப்ஏ ஷீல்ட் தொடரை வென்ற அணியில் அங்கம் வகித்துள்ளார். 'அவருக்கு தெரிந்தது எல்லாம் கால்பந்து மட்டுமே. நூறு சதவீதம் அது குறித்து மட்டுமே எப்போதும் சிந்திப்பார். அந்த தகுதியை பயிற்சியாளர் ஒருவர் அவசியம் கொண்டிருக்க வேண்டும்' என்கிறார் முன்னாள் கோல்கீப்பர் ஹென்றி மெனெசஸ்.

பயிற்சியாளர் முன் உள்ள சவால்? சர்வதேச கால்பந்து தரவரிசை பட்டியலில் இந்திய அணி தற்போது 133வது இடத்தில் உள்ளது. தொடர் தோல்வி, நிர்வாகம் எதிர்கொள்ளும் நிதி ரீதியான சிக்கல்கள் என நெருக்கடிகளுக்கு மத்தியில் காலித் ஜமீல் பயிற்சியாளர் பொறுப்பை ஏற்றுள்ளார். நிச்சயம் இந்த சவாலை அவர் திறம்பட கையாள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சென்னையில் அகில இந்திய மாஸ்டர்ஸ் ஸ்குவாஷ்




மெட்ராஸ் கிரிக்கெட் கிளப் (எம்சிசி) சார்பில் முன்னாள், மூத்த வீரர்கள், வீராங்கனைகளுக்கான அகில இந்திய மாஸ்டர்ஸ் ஸ்குவாஷ் போட்டி சென்னையில் இன்று தொடங்குகிறது. இந்த மாஸ்டர் ஸ்குவாஷ் போட்டி, வயது அடிப்படையில் 35, 40, 45, 50, 55, 60, 65, 70 வயதுக்கு மேற்பட்ட 8 பிரிவுகளில் ஆண்கள் களம் இறங்குவார்கள். பெண்கள் 35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான ஒரே ஒரு பிரிவில் மட்டும் விளையாட உள்ளனர். இன்று முதல் ஆக. 6ம் தேதி வரை நடைபெற உள்ள 9 பிரிவுகளில் 19 மாநிலங்களைச் சேர்ந்த 185 வீரர்கள், வீராங்கனைகள் பங்கேற்க உள்ளனர்.

அர்ஜுன் அக்னிஹோத்ரி, அமித்பால் கோஹ்லி, அமித் சிங், சாஹில் வோரா, சவுரப் நாயர், ஹரிந்தர்பால் சிங், அங்கூர் குப்தா, சாலியா பிரதீக், ஷிபானி பிலிப், கனிகா பிரேம்நாரயண், ராஜீவ் ரெட்டி என தேசிய அளவிலான முன்னாள் நட்சத்திர வீரர்களும், வீராங்கனைகளும் பல்வேறு பிரிவுகளில் பங்கேற்க உள்ளனர். ஒவ்வொரு பிரிவிலும் வெற்றி பெறுபவர்களுக்கு கோப்பைகளுடன், மொத்தம் ரூ.4 லட்சம் ரொக்கப் பரிசாக வழங்கப்படும். போட்டி, சென்னை சேப்பாக்கத்தில் உள்ள எம்சிசி வளாகத்தில் நடைபெறும்.

# ஓவல் டெஸ்ட்டில் இந்திய அணி வாகை சூடுமா? ஒரு விரைவுப் பார்வை

இங்கிலாந்து அணி உடனான கடைசி டெஸ்ட் போட்டியில் இந்திய அணி வெற்றி பெறுமா என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்த சூழலில் ஓவல் மைதானத்தில் இந்தியா மற்றும் வெளிநாட்டு அணிகளின் கடந்த கால செயல்பாடு குறித்து பார்ப்போம்.

ஆண்டர்சன் சச்சின் டிராபி டெஸ்ட் தொடரில் 21 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி முன்னிலை பெற்றுள்ளது. இந்த தொடரின் கடைசி மற்றும் 5வது போட்டி தற்போது லண்டனில் உள்ள ஓவல் மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இந்தப் போட்டியின் முதல் இன்னிங்ஸில் இந்தியா 224 மற்றும் இங்கிலாந்து 247 ரன்கள் எடுத்தது. இரண்டாவது இன்னிங்ஸில் 2 விக்கெட் இழப்புக்கு 75 ரன்கள் எடுத்துள்ளது இந்தியா. இதன் மூலம் இந்தியா இந்த ஆட்டத்தில் 52 ரன்கள் முன்னிலை பெற்றுள்ளது.



இந்தப் போட்டியில் மூன்று நாட்கள் ஆட்டம் நடைபெற உள்ளது. இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸை 23 ரன்கள் பின்தங்கிய நிலையில் தொடங்கியது. இந்த சூழலில் ஓவல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணியின் வெற்றி வாய்ப்பு குறித்து பார்ப்போம்.

ஓவல் மைதானத்தில் முதல் இன்னிங்ஸில் பின்தங்கிய நிலையில் வெளிநாட்டு அணிகளின் செயல்பாடு எப்படி?

கடந்த 1971ல் முதல் இன்னிங்ஸில் 71 ரன்கள் பின்தங்கிய நிலையில் 4 விக்கெட்டுகளில் இங்கிலாந்து அணியை வீழ்த்தியது இந்தியா.

2024ல் முதல் இன்னிங்ஸில் 62 ரன்கள் பின்தங்கிய நிலையில் 8 விக்கெட்டுகளில் இங்கிலாந்தை வீழ்த்தியது இலங்கை.

1963ல் முதல் இன்னிங்ஸில் 29 ரன்கள் பின்தங்கிய நிலையில் இங்கிலாந்தை மேற்கு இந்தியத் தீவுகள் அணி வீழ்த்தியது.

1882ல் முதல் இன்னிங்ஸில் 38 ரன்கள் பின்தங்கிய நிலையில் இங்கிலாந்துக்கு எதிராக 7 ரன்களில் வெற்றி பெற்றது ஆஸ்திரேலியா.

கடந்த 2021ல் முதல் இன்னிங்ஸில் 99 ரன்கள் பின்தங்கிய நிலையில் இங்கிலாந்தை 157 ரன்களில் வீழ்த்தியது கோலி தலைமையிலான இந்திய அணி.

ஓவல் மைதானத்தில் சேஸ் செய்யப்பட்ட அதிகபட்ச இலக்கு!

1902ல் 263 ரன்கள் இலக்கை ஆஸி.க்கு எதிராக இங்கிலாந்து எட்டி இருந்தது.

1963ல் இங்கிலாந்து உடனான ஆட்டத்தில் 253 ரன்களை சேஸ் செய்தது மேற்கு இந்தியத் தீவுகள் அணி.

1972ல் 242 ரன்களை விரட்டி இங்கிலாந்தை வீழ்த்தியது ஆஸ்திரேலியா.

2024ல் 219 ரன்கள் இலக்கை எட்டியது இலங்கை அணி.

1994ல் 204 ரன்களை தென் ஆப்பிரிக்க அணிக்கு எதிராக விரட்டியது இங்கிலாந்து.

2008ல் தென் ஆப்பிரிக்காவுக்கு எதிராக 197 ரன்களை எட்டி இருந்தது இங்கிலாந்து.

1971ல் 173 ரன்கள் இலக்கை இங்கிலாந்துக்கு எதிராக விரட்டி இருந்தது இந்தியா.

ஓவல் டெஸ்ட்டில் இந்தியா வெற்றி பெற எவ்வளவு ரன்கள் தேவை: ஓவல் மைதானத்தில் நடைபெற்ற டெஸ்ட் போட்டிகளை வைத்து பார்க்கும் போது இந்தப் போட்டியிலும் தரமான த்ரில்லிங் சேஸ் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இருந்தாலும் தற்போது லண்டனில் நிலவும் மழை மேகங்கள் சூழ்ந்த வானிலை சூழலை வைத்து பார்க்கும்போது 200+ ரன்களை சேஸ் செய்வது இங்கிலாந்துக்கு சவாலாக இருக்கும். அதேபோல இந்தப் போட்டியின் இரண்டாம் நாளில் மொத்தம் 15 விக்கெட்டுகள் சரிந்துள்ளன. ஆடுகளம் பந்து வீச்சுக்கு சாதகமாக உள்ளது. இதை இரண்டு அணிகளும் நிச்சயம் கவனத்தில் கொள்ளும்.

# தேவகோட்டை அருகே உங்களுடன் ஸ்டாலின் முகாமில் லஞ்சம், ஜாதி சொல்லி திட்டியதாக மண்டல வட்டார வளர்ச்சி அலுவலரை கண்டித்து கையில் பதாகைகளுடன் வந்த கிராம மக்கள்





தேவகோட்டை, ஆக.03-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை ஒன்றியம் திருமணவயல் கிராமத்தில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது. திருமணவயல், நாகாடி ஊராட்சி பகுதியில் வீடு வழங்கும் திட்டத்தில் ரூ 20,000 லஞ்சம் கேட்ட செந்தில்குமார் பதவி விலகு, சிறுவத்தி பகுதியில் ஜாதி பார்த்து அரசு வீடு வழங்கும் செந்தில்குமாரை பணியிட நீக்கம் செய் என கோட்டூர், பொன்னத்தி, சிறுவத்தி கிராம மக்கள் கையில் பதாகை ஏந்தி இந்த முகாமிற்கு வந்து தேவகோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர் பழனியம்மாள் மற்றும் கிராம வட்டார வளர்ச்சி அலுவலர் வேலுச்சாமி யிடம் செந்தில்குமார் மீது புகார் மனு அளித்தனர்.

மனுவில் மண்டல வட்டார வளர்ச்சி அலுவலர் செந்தில்குமார் ஜாதி பார்த்து 100 நாள் வேலை போடுகிறார். கலைஞர்

வீடு திட்டத்தில் வீடு கேட்பவர்களுக்கு தராமல் வசதி படைத்தவர்களுக்கு வீடு ஒதுக்கீடு செய்கிறார், அரசு வீடு வழங்க ரூ. 20,000 லஞ்சம் கேட்கிறார். ஊராட்சியில் நடக்கும் குறைகளை தெரிவித்தால் ஜாதி பெயரைச் சொல்லி திட்டுகிறார் என தெரி வித்தார்.

நிருபர்களிடம் கூறியதாவது மண்டல வட்டார வளர்ச்சி அலுவலர் கண்டித்து கிராம சபை கூட்டத்திலும் சிவகங்கை மாவட்ட ஆட்சியரிடம் இரண்டு முறை மனு அளித்தும் மேலும் தேவகோட்டை வட்டார வளர்ச்சி அலுவலரிடம் புகார் மனு அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை இந்த முகாமில் மனு அளித்து ள்ளோம் இனிமேலாவது நடவடிக்கை எடுப்பார்களா என வேதனையுடன் கூறினார்கள்.




■ இராமநாதபுரம்மேலூர் சாலை(கீ.மீ 76/07278/4) சிவகங்கை கோர்ட் வாசல் முதல் சிவகங்கை பைபாஸ் சாலை வரை சாலை அகலப்படுத்தும் பணி மேம்பாடு செய்வதால் தற்போது நீதிமன்றம் வாசல் முதல் அரச மகளிர் மேல்நிலைப்பரை கான்கிரீட் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருவதால் சிவகங்கை பைபாஸ் (NH-36) மதுரை தொண்டி தேசிய நெடுஞ்சாலை (NH-85) (மதுரை முக்கு)வழியாக 15 நாட்களுக்கு போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று நெடுஞ்சாலை உதவி கோட்ட பொறியாளர் சையது இப்ராஹிம் தெரிவித்துள்ளார்..




■ செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் புதிய டீ பாய் கடையை சமிபத்தில் திறக்கப்பட்ட நிலையில் செங்கல்பட்டு மேற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவின் இணைச் செயலாளர் எஸ்.செந்தில் குமார் அவர்களின் உறவினர் எபினேசர் , மஞ்சு அவர்களின் கடையை செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழக செயலாளர் சிட்லபாக்கம் ச.ராஜேந்திரன் சந்தித்து வாழ்த்துக்கள் தெரி வித்தனர் இதில் பகுதி கழகச் செயலாளர்கள் ஏ.கோபிநாதன், எல்லார் செழியன், தாம்பரம் மாரி, ஆர்.வி.யுவராஜ் உட்பட அதிமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

# மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் ஆவணி மூலத்திருவிழா 20ம் தேதி தொடக்கம்: செப்.1ல் சுவாமிக்கு பட்டாபிஷேகம்



மதுரை, ஆக.03-

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் ஆவணி மூலத்திருவிழா வரும் 20ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. இதையொட்டி செப்.1ம் தேதி சுவாமிக்கு பட்டாபிஷேகம் நடைபெறுகிறது. மதுரையில் உலகப்புகழ் பெற்ற மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோயில் உள்ளது. இக்கோ யிலில் சுந்தரேஸ்வரரின் திருவிளையாடல்களை விவரிக்கும் ஆவணி மூலத்திருவிழா வரும் 20ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. அன்று முதல் செப்.6ம் தேதி வரை கோயிலின் 2ம் பிரகாரத்தில் காலை மற்றும் இரவு வேளைகளில் சுவாமி சந்திரசேகர் உற்சவ புறப்பாடு நடைபெறும்.

விழாவின் முக்கிய நிகழ்ச்சியாக செப்.1ம் தேதி காலை வளையல் விற்றல் லீலை நடைபெறும். அன்று மாலையில் சுவாமிக்கு பட்டாபிஷேகம் நடைபெறும். செப்.2ல் நரியை பரியாக்கிய திருவிளையாடல், 3ம் தேதி புட்டுக்கு மண் சுமந்த லீலை, 4ல் விறகு விற்ற லீலை நடக்கிறது. 5ம் தேதி காலை சட்டத்தேர் நடக்கிறது. 6ம் தேதி தீர்த்தவாரியுடன் திருவிழா நிறைவு பெறும். அன்று இரவு திருவீதி புறப்பாடு முடிந்து 16 கால் மண்டபத்தில் திருப்பரங்குன்றம் சுப்ரமணிய சுவாமியும், திருவாதவூர் மாணிக்க வாசகர் விடை பெறுதல் நிகழ்வும் நடைபெறும். மதுரையம்பதியில் இறைவன் நிகழ்த்திய 64 திருவிளையாடல்களில், 12 சிறுவிளையாடல்கள் ஆவணி மூலத்திருவிழாவில் நடைபெறுவது முக்கிய அம்சமாகும். இதற்கான ஏற்பாடுகளை கோயில் நிர்வாகிகள் செய்து வருகின்றனர்.







# காரைக்குடி நேஷனல் ஃபயர் மற்றும் சேப்டிக் கல்லூரியில் “ஆருயிர் அனைவருக்கும் உயிர் காப்போம்“ முதலுதவிப் பயிற்சி முகாம்




காரைக்குடி, ஆக.03-

காரைக்குடி நேஷனல் ஃபயர் மற்றும் சேப்டிக் கல்லூரி தமிழ்நாடு சிவகங்கை மாவட்ட தமிழ்நாடு அறிவியல் இயக்கம் காரைக்குடி குளோபல் மருத்துவமனை இணைந்து “ஆருயிர் அனைவருக்கும் உயிர் காப்போம்“ பயிற்சி முகாம் நேஷனல் ஃபயர் மற்றும் சேப்டிக் கல்லூரி கலையரங்கில் நடைப்பெற்றது. நேஷனல் கல்வி நிறுவனங்களின் தாளாளரும் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் மாவட்ட துணை தலைவருமான அரிமா சையது தலைமை வகித்துப் பேசினார். கல்லூரி முதல்வர் தனசீலன் வரவேறப்புரையாற்றினார். தமிழ்நாடு அறிவியல் இயக்கம் மாவட்டச் செய லாளர் ஆரோக்கியசாமி தொடக்க உரையாற்றினார். முகாமில் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் ஆரோக்கிய இயக்கத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் மருத்துவர் அனுரத்னா சிறப்புரையாற்றினார்.

ஆருயிர் அனைவருக்கும் உயிர் காப்போம்“ முதல் உதவிப் பயிற்சியை காரைக்குடி குளோபல் மருத்துவமனையின் தலைவர் மருத்துவர் குமரேசன் தலைமையில் மருத்துவர் பிரவீன் குழுவினர் பயிற்சி அளித்தனர். இதில் இதய நுரையீரல் புத்துயிர் பெற்று (CPR) உயிர் பிழைக்கச் செய்தல், தீக்காயம், பாம்புக்கடி, வலிப்பு மற்றும் பக்கவாதம், நீரில் மூழ்குதல் (Drowing), மூச்சுத் திணறல் (Chocking) ஆகியவற்றில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை தங்களை விபத்தின்போது முதல் உதவி செயல்பாட்டால் எவ்வாறு காப்பாற்றலாம் என்பது குறித்து நேரடி செய்முறை விளக்கம் மூலம் சிறப்பாக பயிற்சி அளிக்கப்பட்டது.

தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டப் பொருளாளர் பிரபு காரைக்குடி கிளைத் தலைவர் செந்தில்குமார். செயலாளர் முனைவர் முனியப்பன், வானவில் மன்ற மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மாலா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பயிற்சியின் நிறைவில் ஆகஸ்ட் 6 ஹிரோசிமா நாகசாகி தினத்தை நினைவுக் கூர்ந்து “உலகினை அழித்திடும் யுத்தமே வேண்டாம், எங்கும் பறக்கனும் வெள்ளைப்புறா” என்ற “யுத்தம் தவிர்” என்ற பாடலை பங்கேற்பாளர்கள் அனைவரும் பாட பயிற்சி நிறைவுப் பெற்றது. சேஃப்டி கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள், வானவில் மன்ற கருத்தாளர்கள் உட்பட நூறு பேர் இம்முதலுதவிப் பயிற்சியை பெற்றனர். நேஷனல் கல்வி நிறுவனத்தின் மக்கள் நல அலுவலர் ராஜு நன்றியுரையாற்றினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை சேப்டிக் கல்லூரி துணை முதல்வர் வினோத் மற்றும் ஆசிரியர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.





# தாம்பரம் மாநகராட்சி, 5வது மண்டலம், 67 - 70 ஆகிய வட்டங்களில் உங்களுடைய ஸ்டாலின் சிறப்பு முகாம்

தாம்பரம், ஆக.03-

தமிழ்நாட்டிலுள்ள மக்கள் அன்றாடம் அணுகும் அரசு துறைகளின் சேவைகள் திட்டங்களை அவர்களின் இல்லத்திற்கே சென்று வழங்கும் உங்களுடன் ஸ்டாலின் என்ற புதிய திட்டத்திற்க்கான சிறப்பு முகாமை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிதம்பரத்தில் துவக்கி வைத்ததை தொடர்ந்து தாம்பரம் மாநகராட்சி, 5வது மண்டலம், 67 - 70 ஆகிய வட்டங்களில் தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா உங்களுடன் ஸ்டாலின் என்ற புதிய திட்டத்திற்க்கான சிறப்பு முகாமை துவக்கி வைத்து, பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார் மேலும் முகாமில் தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார் இந்நிகழ்வில் தாம்பரம் மாநகர மேயர் க.வசந்தகுமாரி, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், 5வது மண்டல குழு தலைவர் எஸ்.இந்திரன், பகுதி செயலாளர் ஆ.நடராஜன், தாம்பரம் மாநகர துணை செயலாளர் பி.சதாசிவம், தாம்பரம் மாநகர வர்த்தகர் அணி அமைப்பாளர் கோ.தேனுபுரி, வட்ட செயலாளர் எம்.கே.மோகனரங்கம், மாமன்ற உறுப்பினர் மு.தேவேந்திரன், வாட்டர் ராஜ் வட்ட செயலாளர்கள், அரசு அலுவலர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்

# பாமக பொதுக்குழு கூட்டம்: ராமதாஸ், அன்புமணி போட்டி அறிவிப்பு

விழுப்புரம் / சென்னை, ஆக.03-

பாமக தலைமை நிலையம் வெளியிட்டுள்ள அறிக் கை: பாமக நிறுவனர் மற்றும் தலைவர் ராமதாஸ் உத்தரவுபடி, திண்டிவனம் புதுச்சேரி செல்லும் வழியில் உள்ள பட்டானூர் சங்கமித்ரா திருமண மண்டபத்தில் வரும் 17ம் தேதி காலை 10 மணிக்கு சிறப்பு பொதுக் குழுக் கூட்டம் நடைபெற உள்ளது.

இதில், மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர நிர்வாகிகள் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட் டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், ராமதாஸ் நடத்துக் கும் கூட்டத்துக்கு போட்டியாக ஆக. 9ம் தேதி பொதுக் குழுக் கூட்டம் நடைபெறும் என்று பாமக தலைவர் அன் புமணி அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அன்புமணி மற்றும் பொதுச் செய லாளர் வடிவேல் ராவணன் வெளியிட்ட அறிக்கையில், “பாமக பொதுக்குழுக் கூட்டம் மாமல்லபுரத்தில் உள்ள கான்ப்ளுயன்ஸ் அரங்கில் ஆக. 9ம் தேதி நடைபெறும். பொதுக்குழு உறுப்பினர்கள் தவறாது பங்கேற்க வேண் டும்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



■ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சென்னையில் இருந்து காணொலிக் காட்சி வாயிலாக “நலம் காக்கும் ஸ்டாலின்” என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். அதனை தொடர்ந்து மதுரை மாவட்டம், ஒத்தக்கடை அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் “நலம் காக்கும் ஸ்டாலின்” பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாமினை மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி அவர்கள் திட்ட அரங்கினை பார்வையிட்டு காச நோயளிகளின் குடும்ப உறுப்பினர்களுக்கு ஊட்டச்சத்து உணவு பெட்டகத்தையும் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு நவீன செயற்கை கால்களை வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., அவர்கள், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆ.வெங்கடேசன் அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.



# பருவமழை முன்னெச்சரிக்கை பணி ரூ.38 கோடி ஒதுக்கீடு: பணிகளை செப். 15ம் தேதிக்குள் முடிக்க உத்தரவு

சென்னை, ஆக.03-

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை பணிகளுக்கென தமிழக அரசு ரூ.38 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதுகுறித்து தமிழக அரசின் நீர்வளத்துறை சார்பில் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை: 2025-26ம் ஆண்டிற்கான வடகிழக்கு பருவமழை முன்னெச் சரிக்கை பணிகளுக்கென தமிழக அரசு ரூ.38 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. அதன்படி சென்னை பெருநகர எல்லைக்குள், 15 மண்டலங்களில் 78 பணிகளும், சென்னை புறநகர் மற்றும் காஞ் சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் 117 பணிகளும் தொடங்கி நீர்வளத்துறை மூலம் நடைபெற்று வருகிறது.

இதில் பக்கிங்காம் கால்வாயில் 19 பணிகளும், கூவம் ஆற்றில் 19 பணிகளும், அடையாற்றில் 5 பணிகளும், இதர 35 பணிகள் வரவு கால்வா ய்கள், ஏரிகள், உபரி நீர் கால் வாய், மடுவு பகுதிகளில் படர்ந்துள்ள ஆகாயத்தாமரைகள், திடக் கழிவுகள், மிதக்கும் பிளாஸ்டிக் கழிவுகள் அகற்றும் பணிகள் 234 மிதக்கும் மண் கழிவு அகற்றும் இயந்திர ங்களுடன் குப்பையை அகற்ற லாரிக ளுடன் பணிகள் நடந்து வருகிறது.

இதுதவிர முட்டுக்காடு, புதுப்பட்டினம், கூவம், அடையாறு, எண்ணூர் மற்றும் பழவேற்காடு முகத்துவாரங்களில் சேர்ந்துள்ள மணல் படிவுகள் அகற்றும் பணிகளும் நடக்கிறது. இந்த பணிகள் அனைத்தும் செப்டம்பர் 15ம் தேதிக்குள் முடிக்க திட்டமிட்டுள்ளது. இதுகுறித்து நீர்வளத்துறை செயலாளர் ஜெயகாந்தன் நேற்று முதன்மை தலைமை ஆய்வு மேற்கொண்டார். மேலும், அனைத்து நீர்த்தேக்கங்களின் இயக்கம் மற்றும் பராமரிப்புக்காக ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு மையத்தி ற்கான கட்டிடங்களையும், கட்டுப்பாட்டு மையத் திற்கான மின் கணினி செயற்கைக்கோள் தகவல் கருவிகள் மற்றும் உபகரணங்களையும் ஆய்வு செய்தார். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161